**நாள் 19.12.19 STC No. 211/2019 மசா1 கண்ணப்பன்.**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு மு.வி)**

நான் இந்த புகாரில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்திருக்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எதிரி எனது பெயருக்கு State bank of india வங்கி பொள்ளாட்சி கிளை காசோலை எண்.420863, 09.08.2018 ம் தேதியிட்டு ரூபாய் 5,00,000/-க்கு எனது வீட்டில் வைத்து வழங்கினார் அவர் வழங்கிய அசல் காசோலையை தாக்கல் செய்கிறேன். அது மதசாஆ 1 ஆகும். அதே தேதியில் மேற்படி காசோலையை தனலட்சுமி வங்கி உடுமலைபேட்டை கிளையில் வசூலுக்காக தாக்கல் செய்தேன். மேற்படி காசோலை எதிரி அவருடைய வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று மேற்படி காசோலை 10.08.2018 ம் தேதி திருப்பபப்பட்டது. அந்த Return memo மதசாஆ 2 ஆகும். மேற்படி விவரம் குறித்து 14.08.2018 ம் தேதி வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பபப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல் மதசாஆ 3 ஆகும். மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புகை அட்டை மதசாஆ 4 ஆகும். எதிரி மேற்படி அறிவிப்பிற்கு அனுப்பிய பதில் அறிவிப்பு மதசாஆ 5 ஆகும். எதிரி மேற்படி காசோலை தொகையை திருப்பி செலுத்தவில்லை. அதனால் இந்த புகாரை தாக்கல் செய்திருக்கிறேன். புகார் படி தீர்ப்பாகவேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**கு.வி. இல்லை.**